புதன்பொய்கை

# உதயன்

Registered as a Newspaper

சுடர் : 40
கதிர் : 343

புதன்கிழமை
05 நவம்பர் 2025

ஐப்பசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## தர்மபுரத்தில் முதிரைக் குற்றிகள் மீட்பு!

விரிவு பக்கம்:- 03

மன்னாரில்

# புதிய காற்றாலைகளை ஆரம்பிக்கமாட்டோம்!



### அனுமதித்த திட்டங்கள் மாறாது
### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

**கொழும்பு, நவம்பர் 5**

**மன்னாரில் இனிவரும் காலங்களில் புதிதாக வேறு காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.**

15

## பட்ஜெட்டில் இம்முறை வரிஅதிகரிப்பு இருக்காது

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 5

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பு இடம்பெறாது. இயலுமான அனைத்துத் துறைகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த

15

சுன்னாகம் – சூராவத்தையில்

## வன்முறைக்குழு அடாவடி ஓட்டோவொன்று தீக்கிரை



யாழ்ப்பாணம், நவ. 5

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக்குழு பெரும் அடாவடியில் ஈடுபட்டதுடன், ஓட்டோவொன்றையும் தீக்கிரையாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- சுன்னாகம்-சூராவத்தை

15

## திஸ்ஸ விகாரையை உடன் அகற்றுங்கள்

### தையிட்டியில் நேற்றுப் போராட்டம் இன்றும் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் தையிட்டில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றிவிட்டு, அந்தக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி காணிகளின் உரிமையாளர்கள் நேற்றுப்

15

## தமிழரசின் மத்தியகுழு வவுனியாவில் இன்று!

வவுனியா, நவ. 5

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் வவுனியாவில் இன்று இடம்பெறவுள்ளது.

15



## குளவி கொட்டியதில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

கருங்குளவி கொட்டியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைநகர் மணல்பிட்டி பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சிறிஸ்கந்தநாதன் (வயது-61)

15

## சங்குப்பிட்டியில் பெண்ணின் சடலம்; பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைது!

### வாக்குமூலத்தில் பரபரப்புத் தகவல்கள்

யாழ்ப்பாணம், நவ. 5

பூநகரி சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நேற்று அதிகாலை கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தவில் வித்துவான் என்றும், குப்பிளானில் வைத்துக் கைதானார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒக்ரோபர் மாதம்

15



முச்சந்தி முரளி

'அப்ப அவை போட்டுவைச்ச காற்றாலைத் திட்டமெல்லாம் ஓகே கண்மணி தானே'

கோம்பயன்மணல் மயானத்தில்

## 950 கிலோ போதைப்பொருள் நேற்று எரித்து அழிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாகக் கைப்பற்றப்பட்ட 950 கிலோவுக்கும் மேற்பட்ட போதைப்பொருள்கள் நேற்று எரித்து அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான்

15



## வவுனியா – பூம்புகார் பகுதியில் இளம் குடும்பப்பெண் கொலை!

### கணவன் தலைமறைவு பொலிஸார் தீவிர தேடுதல்



வவுனியா, நவ. 5

வவுனியா - பூம்புகார் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 04.11.2025 | 4245 | S | 05 31 70 78 | விசேட எழுத்து: S |
| ஹந்தஹஹரண ராசி சுப பலன் | 04.11.2025 | 1312 | | 22 38 45 46 | வெற்றி இலக்கினம்: மேஷம் |
| NLB ஜய | 04.11.2025 | 0271 | P | 2 9 9 7 | |
| மெகா பவர் | 04.10.2025 | 2351 | U | 06 27 54 57 | சுப்பர் இலக்கம்: 20 |
| மஹஜன சம்பத | 04.11.2025 | 6003 | A | 9 0 8 6 8 7 | |
| தன நிதானய | 04.11.2025 | 2033 | Q | 03 46 50 76 | விசேட எழுத்து: Q |
| அத சம்பத | 04.11.2025 | 0578 | A | 8 6 8 7 | |
| சுப தவசக் | 04.11.2025 | 0119 | | 01 43 49 | வெற்றி இலக்கினம்: ரிஷபம் |

# உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்கு மருந்து

## இலங்கையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த ராகம மருத்துவபீடத்தின் ஒரு மருத்துவக் குழுவினர், உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு புதிய மருந்தை வெற்றிகரமாகத் தயாரித்துள்ளனர்.**

உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் மூன்று மாத்திரைகள் கொண்ட கூட்டு மருந்துக்குப் பதிலாக, ஒரே ஒரு மாத்திரையை இந்தக் குழு உருவாக்கியுள்ளது.

இந்த மருந்தை உட்கொள்வதன் மூலம், உயர் இரத்த அழுத்தம் காரணமாக இரத்தக் குழாய்கள் வெடிப்பதால் ஏற்படக்கூடிய பக்கவாத நோய்த்தொற்று சுமார் 60 வீதம் வரை தடுக்கப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த நரம்பியல் நோய் நிபுணர், மருத்துவர் பிம்ஸர சேனநாயக்க, பொதுவாகப் பக்கவாதம் என நாம் பயன்படுத்தும் நோய் மிகவும் பொதுவானது. சுமார் 80 வீதம் பேருக்கு இது இரத்தக் குழாயில் இரத்தக்கட்டி அடைபடுவதாலோ அல்லது இரத்தக் குழாய் வெடிப்பதால் இரத்தக் கசிவு ஏற்படுவதாலோ ஏற்படுகிறது. நாங்கள் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தியது, இத்தகைய நோயாளிகளுக்கு ஏற்படும் நிலைதான். இந்தப் புதிய மருந்து மூலம் உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, இந்த நோய் மீண்டும் ஏற்படுவதைக் குறைக்க முடியுமா என்று பரிசோதித்தோம். பரிசோதனை முடிவுகள் எதிர்பாராத அளவு பெரிய வெற்றி கிடைத்துள்ளது. இந்த மருந்தை எடுத்துக்கொள்வதன்மூலம் பக்கவாதம் மீண்டும் ஏற்படுவது 60 வீதம்வரை தடுக்கப்படுகிறது - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | 0711 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 6 1 5 8 9 2 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2977 | Y | 03 30 48 75 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 03 05 58 66 | 5138 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0807 | 10 25 28 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 27 36 44 55 | 4689 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 37 | 03 11 22 48 | 2153 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 01 17 57 60 | 2803 |

# பங்குச்சந்தை சாதனை

கொழும்பு, நவ.5

கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று வரலாற்றில் மீண்டும் உச்சத்தைப் பதிவு செய்தது. அதன்படி அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்றுக் காலை 23,000 புள்ளிகளைக் கடந்தத்துள்ளது. (ச-இ)

# கடற்றொழிலை நவீனமாக்க சவுதி அரேபியா ஒத்துழைப்பு

கொழும்பு,நவ.5

இலங்கையில் கடற்றொழில் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயப்படுத்தும் நோக்கில், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அறிவுப் பரிமாற்றம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்களை வழங்க சவுதி அரேபியா முன்வந்துள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

சந்திப்பில் இலங்கையின் கடற்றொழில் மற்றும் நீரியல் துறைகளில் சவுதி முதலீட்டாளர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் மற்றும் முதலீட்டை ஊக்குவிக்க இலங்கை அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்று தூதுவருக்கு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் விளக்கமளித்தார்.

இதற்குப் பதிலளித்த தூதுவர், இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து , உறவுகளை வலுப்படுத்த தயார் என்றார். (க-26)

# அத்துமீறும் தமிழக மீனவர்கள்: கண்காணிப்பை இறுக்குங்கள்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் கோரிக்கை

மன்னார்,நவ.5

இலங்கைக் கடற்பரப்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டாலும், இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. எனவே இலங்கைக் கடற்பரப்பில் கடல் கண்காணிப்பை கடற்படையினர் இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் என்.எம்.ஆலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையாதீர்கள் என எத்தனையோ தடவைகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற போதும், தமிழக மீனவர்கள் தமிழகத்தில் தொழில் செய்வதை விட, இலங்கைக் கடற்பரப்பில்தான் தொழில் செய்கின்றனர். தொடர் கைதுகள் இடம்பெற்றாலும் தமிழக மீனவர்கள் அத்துமீறுவதை நிறுத்தவில்லை. கடற்பரப்பு ஊடாக ஆள்கடத்தல்கள் குறிப்பாக போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த இலங்கைக் கடல் எல்லையில் கண்காணிப்பைக் கடற்படையினர் இன்னும் தீவிரப்படுத்தவேண்டும்- என்றார். (க-56)



# தமிழர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்வரை போராடுவோம்

## சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

தமிழ் மக்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு இந்த மண்ணில் அவர்கள் கௌரவமாக வாழும்வரை எமது அரசியல் போராட்டம் ஒருபோதும் கைவிடப்படமாட்டாது என்று யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் முதல்வரும் தமிழ்மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினருமான சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் யாழ். தலைமைக் காரியாலய திறப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மண்ணில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் மக்களை ஒரு தேசமாகக்கட்டி எழுப்புகின்ற வரலாற்றுப் பயணத்தை [illegible] யாக மேற்கொள்ளவில்லை. அதிலிருந்து விலகி, ஒரு முன்னுதாரணமாக எமது கட்சி பயணிக்கவேண்டும் இந்த மண்ணின் எழுச்சிக்காக, தமிழ் மக்களுடைய உரிமைக்காக களமாடி மடிந்த அத்தனை உயிர்களின் ஆத்மாக்கள் மீது சத்தியம் செய்தவர்களாக நாங்கள் எங்களுடைய பயணத்தை ஆரம்பித்துள்ளோம். அந்த இலட்சியத்தை நாங்கள் [illegible] இல்லை - என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நான்கு இடங்களில் சுனாமி அனர்த்த ஒத்திகை

## மக்கள் பதற்றமடைய வேண்டாமென அறிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.5**

**வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை கரையோரப் பகுதியில் இன்று புதன்கிழமை சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது.**

இதனால் மக்கள் அநாவசியமாக பதற்றமடையவேண்டாம் என யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா அறிவித்துள்ளார்.

சுமாத்திரா தீவை அண்மித்த கடல் பகுதிகளில் பல சிறிய நிலநடுக்கங்கள் தொடர்ச்சியாக பதிவாகிவருவதனால் இலங்கையும் சுனாமிக்கு தயாரான நாடு என்ற வகையில் யாழ்ப்பாணம், களுத்துறை, மாத்தறை, மற்றும் மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களை பிரதானமாகக் கொண்டு தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு இந்திய பெருங்கடல் பிராந்திய சுனாமி எச்சரிக்கை மையத்தின் கீழ் உள்ள 28 நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக ஒருபகுதியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/401 சுப்பர்மடம் கிராமத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இந்த சுனாமி ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது. இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதனால் இது தொடர்பில் பொதுமக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். (ச-26,27, 100)

## குடிதண்ணீர் இணைப்புக்கு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.5

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள பளைப் பிரதேச மக்களுக்கு, குடிதண்ணீர் இணைப்பு வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 வரை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

எனவே குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ள மக்கள், தங்களுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் காணி ஆவணம் (இருப்பின்) ஆகியவற்றின் நிழற்பிரதிகளுடன் வருகை தந்து, விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலர்களிடம் கையளிக்க முடியும் என்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.(க-213)



## முதிரை மரக்குற்றிகள் தருமபுரத்தில் மீட்பு

கொழும்பு, நவ.5

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து 30 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை சட்டவிரோதமாக ஏற்றிச் சென்ற கப்ரக வாகனத்துடன் 3 சந்தேகநபர்கள் தருமபுரத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்கு நேற்றுக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக இந்தச் சட்டவிரோத செயல் முறியடிக்கப்பட்டது.

சந்தேகநபர்களை சான்றுப்பொருள்களுடன் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113,27)



வவுனியா

## பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவை விற்பனை நிலையம்

வவுனியா,நவ.5

இலங்கையிலேயே உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் முதன்முறையாக, வவுனியா பொருளாதார மத்திய நிலயத்தில், கமநல சேவைகள் நிலைய விற்பனை நிலையம், மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திரவினால் நேற்றுத் திறக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மக்களுக்கு குறைந்த விலையில் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் குறித்த நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் நா.கமலதாசன், தேசிய இரசாயன உரச்செயலகப் பிரதிப்பணிப்பாளர் எஸ்.எம்.பி.விஜயவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள மேலதிக ஆணையாளர் ஏ.எம். விக்ரமராச்சி, மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.(க-110)




## கடைக்காரர் காட்டில மழை..!

யமனுக்கே இடியப்பம் தீத்தின எங்கட ஆக்களுக்கு எந்தச் சட்டத்தைக் கொண்டாந்தாலும், அதுக்க உச்சிப்போட்டு உடும்பு பிடிக்கிற வல்லமை எப்பவும் இருக்கு. எல்லா இடமும் ஒரே சொப்பிங் பை குப்பையளால சூழலுக்குக் கடும் பிரச்சினை. பெட்டிக்கடையில இருந்து சுப்பர்மார்க்கெட் வரை எந்தச் சாமான் வாங்கினாலும் அதைக்கொண்டு போறதுக்கு சொப்பிங் பை குடுக்கிறதாலதான் இப்பிடிக் கூடுதலா புழங்குது. எங்கட ஆக்களுக்கு ஓசியில பொலிடோலைக் கேட்டாலும் ஒண்டுக்கு ரண்டாத் தரச்சொல்லிக் கேப்பினம். அவைக்கு ஷொப்பிங் பையை ஓசியில குடுத்தால் விடுவினமோ? ஒரே ஷொப்பிங் பையில கொண்டு போகக்கூடிய சாமான்களுக்கு கூட தனித்தனி ஷொப்பிங்பைவாங்கி அதிலதான் கொண்டுபோவினம். இப்பிடி தேவைக்கு அதிகமா ஷொப்பிங் பை குடுபடுறதால, முந்தினதை விடவும் இப்ப எல்லா இடமும் ஷொப்பிங் பை நீக்கமற நிறைஞ்சிருக்குது. அதைக் கட்டுப்படுத்த என்ன வழி? எண்டு அரசாங்கம், ரூம் போட்டு யோசிச்சுக் கண்டுபிடிச்ச விசயம் தான், "இனி மேல் எந்தக் கடையிலையும் சாமான் வாங்கிறவைக்கு ஒப்பிங் பையை இலவசமாக் குடுக்கக்கூடாது" எண்ட வர்த்தமானி அறிவிப்பு.

"இப்பிடி இலவசமா ஷொப்பிங்பையைக் குடுக்காட்டி, ஓசியில வாங்கிப் பழக்கப்பட்ட சனம் காசுகுடுக்கப் பஞ்சிப்படும், பிறகு ஷொப்பிங் பையுக்கு காசு குடுத்து வாங்கிறதைவிட வீட்டில இருந்து துணிப்பை கொண்டுபோவினம். அதைமாதிரி கடைக்காரரும் இலவசமா ஷொப்பிங் பையுக்க சாமானைப் போட்டுக் குடுக்க ஏலாததால அவையும், கடுதாசிப்பையை சாமான்களைப் போட்டுக்கொண்டு போக இலவசமாக் குடுப்பினம், அதால ஷொப்பிங் பையின்ர பாவனை அரைவாசியாக் குறைஞ்சிடும்" எண்டுதான் திசை காட்டி அரசாங்கம் கனவு கண்டது. ஆனால் நினைச்சதெல்லாம் நடக்காது எண்டதை இந்தச் ஷொப்பிங் பை விவகாரம் முகத்தில அறைஞ்சமாதிரிச் சொல்லியிருக்கு. இப்ப கடைக்காரர் என்ன செய்யினம் எண்டால், ஷொப்பிங் பையுக்கு தாங்கள் நினைச்ச விலை வைச்சு குடுக்கினம். சனமும் வாங்கின சாமானைக் கொண்டுபோயே ஆகோணும் எண்டதுக்காக , காசு கூடச் சொன்னாலும் அந்தக் கடையளில ஷொப்பிங் பையளை வாங்குகினம். அதால இப்ப கடைக்காரரின்ர காட்டிலதான் கடும் மழை.

அதைவிட இன்னொரு விளையாட்டையும் கடைக்காரர் காட்டுகினம். முந்தி மிச்சக்காசுக்குப் பதிலா ரொபி, சுவிங்கம், நெருப்பெட்டி எண்டு குடுத்தவை. இப்ப என்னடாவெண்டால் மிச்சக்காசுக்கு ஷொப்பிங் பையைக் குடுக்கினம். இன்னும் சில கடையளில ஒரு ஷொப்பிங் பை வாங்கினால் இன்னொண்டு இலவசம் எண்டு குடுக்கினமாம். எப்பிடிப் பார்த்தாலும் சனம் முந்தினமாதிரி ஷொப்பிங் பையும் கையுமா அலைஞ்சுக் கொண்டுதான் இருக்கு. மூலை முடுக்கெல்லாம் இப்பவும் ஷொப்பிங் பையள் பறந்துகொண்டுதான் இருக்குது. கடைக்காரர் தான் முந்தினதை விட இப்ப ஷொப்பிங் பையிலையும் நல்லாக் கல்லா கட்டுகினம். ஷொப்பிங் பையுக்கு முடிவு கட்டுறம் எண்டிட்டு கடைசியில கடைக்காரருக்கு லாபம் காட்டினதுதான் மிச்சம் கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சிலபிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் –மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். கணவன் –மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக் கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். மாலையில் பிள்ளைகளுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும். காலையில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாகத் திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித்தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.



# சாதனையாளர் மிதுன்ராஜ் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்று பதக்கம் வென்ற வடமராட்சியைச் சேர்ந்த மிதுன்ராஜின் வரலாற்றுச் சாதனையைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபர் த.கலைச்செல்வன், யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சார்பில் அதன் தலைவர் கு.மகாலிங்கம் , பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர், பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் சாதனை வீரன் மிதுன்ராஜுக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து மதிப்பளித்தனர். பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25,100)

# ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையம் நடத்தும் ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மைய நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.எஸ்.இரத்தினவேல் 'பொறுப்புக்கூறலும் சுயாதீன வழக்குத் தொடுநர் தொடர்பிலான விவாதமும்' எனும் தலைப்பில் சிறப்புக் கருத்துரையை வழங்குவார்.

'தற்போதைய சூழலில் அரசியலமைப்பாக்கச் செயன்முறையில் தமிழர் அணுகுமுறை எவ்வாறு இருத்தல் வேண்டும்?' எனும் தலைப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், தமிழீழ மக்கள் விடுதலைக்க ழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர். (ச-41)



# போதைப்பொருள் விழிப்புணர்வு !

போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு தருமபுரம் மத்திய கல்லூரியில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசநாயக்க, தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி இந்திராணி, கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் ஆகியோரால் மாணவர்களுக்கு கருத்துகள் வழங்கப்பட்டன. (ச-25,113)

# புதுக்குடியிருப்பில் விபத்து குடும்பப்பெண் உயிரிழப்பு!

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் - சிவநகர் பகுதியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை மேரிதிரேசா (வயது-66) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் வீதியோரமாக நின்ற குடும்பப் பெண்மீது மோட்டார்சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது படுகாயமடைந்த அந்தப் பெண் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே, மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-19)

# இணுவில் அறிவாலயத்தில் முழுநிலாக் கலையரங்கம்

யாழ்ப்பாணம், நவ.5

இணுவில் அறிவாலயத்தில் முழுநிலாக் கலையரங்கம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. சிறுவர்கள் பங்குகொள்ளும் சிறப்புப் பண்ணிசைப் பாடல்கள் மற்றும் கதாப்பிரசங்க நிகழ்வுகளுடன், விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், செம்முகம் ஆற்றுகைக்குழு க.சீலனின் இயக்கத்தில் "வேலை" குறுநாடகமும் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வு பெரிய பிரித்தானியா அறிவு அறக்கட்டளையின் அனுசரணையில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# செல்லப்பா சுவாமி குருபூஜை நிகழ்வு !

சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூஜை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. சுவாமிகளுக்கு அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து காலை 9 மணியளவில் திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் ஓதுதல் இடம்பெறும். தொடர்ந்து காலை 10 மணியளவில் வலிகாமம் வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் சு.தேவமனோகரன் 'நோய் நீக்கம்' எனும் தலைப்பில் உரையாற்றுவார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம்

"உலகம் நாளை துண்டுகளாக உடைத்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."

– மார்ட்டின் லூதர்–

# பிள்ளையார் பிடிக்கப் போய்...!


இலங்கையின் ஆரம்பக் கல்வித்துறையில் இப்போது ஒரு முக்கியமான மாற்றம் நடக்கவிருக்கின்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இனிமேல் பாரம்பரிய பாடப் புத்தக முறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக எளிமைப் படுத்தப்பட்ட கற்றல் கையேடுகள் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. கல்வி வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகக் கருதலாம். ஆனால், இந்த மாற்றம் கல்வித் துறையின் மேம்பாட்டுக்கான வழிமுறையாக மாறுமா அல்லது புதிய குழப்பங்களுக்குக் காரணமாகுமா என்பது அது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றது என்பதில்தான் தங்கியிருக் கின்றது.

மாணவப்பருவத்தில் குழந்தைகள் தமது வயதுக் கேற்ற உடற்தகுதியை மீறி, கனமான புத்தகங்களையும் பாடப்பை சுமையையும் தாங்கிச் செல்லவேண்டிய கட் டாயத்தில் உள்ளனர். இந்தச் சுமை உடல் வளர்ச்சியிலும், மன ஒருமைப்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. எனவே கற்றல் கையேடு முறை, குழந்தைகளுக்கு சுமையில்லாத, சுவாரஷ்யமான, மற்றும் செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல் சூழலை உருவாக்கும் என்பதை மறுக்கமுடியாது. மாணவர்களின் கற்றல் சுமை குறையும், சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் ஆர்வத்தை இழக்காமல், உற்சாகத்துடன் கற்றலில் ஈடுபடலாம். அதே நேரம், கற்றல் முறையில் படைப்பாற்றல் வளர்ச்சி ஏற்படும். பாரம்பரியமாக எழுதிப் படிக்கும் கற்பித்தல் முறை மையைவிட, கையேடுகள் விளையாட்டு, படம், செயல் சார்ந்த செயற்பாடுகள், குழுவாய்ந்த கற்றல் போன்ற பலவிதமான பயிற்சிகளை உள்ளடக்கியிருக்கும். இது குழந்தைகளின் சிந்தனைத்திறன், ஆர்வம், ஆராய்ச்சி மனப்பாங்கு, மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் என்பவற்றை வளர்க்கும். ஆசிரியர்களுக்கு கற்பித்தல் சுதந்திரம் அதிகரிக்கும். பாடப்புத்தகங்களில் குறிப்பிடப் பட்ட பகுதிகளை மட்டுமே கற்பிக்கவேண்டிய கட்டுப் பாடு குறைவதால், ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைக்கு ஏற்ப பாடத்திட்டத்தை மாற்றியமைத்துக் கற்பிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். செயற்பாட்டுக் கற்றல் முறை கல்வியை ஒரே மாதிரியான சலிப்பான நிகழ்வாக இல் லாமல், குழந்தைகள் நேரடியாக பங்கேற்கும் அனுபவ மாக மாற்றும்.

ஆனால் பல ஆண்டுகளாக பாடப்புத்தகங்களை மைய மாகக்கொண்டு கற்றும், கற்பித்தும் வந்த ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் திடீரென கையேட்டு முறைக்கு மாறுவது எளிதானது அல்ல. இந்த நடைமுறை சிறந்த பலனைத் தருவதற்கு ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி மிக அவசியம். கற்றல் கையேடுகளைப் பயன் படுத்தி பாடங்களை நடத்துவதற்கு பாரம்பரிய வகுப்பறை கற்பித்தலைவிட மாறுபட்ட திறன் தேவைப்படும். அதற்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படாவிட்டால், ஆசிரியர்கள் இந்த முறையை தவறாகப் பயன்படுத்தும் அபாயமும் உள்ளது. பிள்ளையார் பிடிக்க நினைத்து குரங் கான கதையைப் போன்று, இந்தத் திட்டத்தின் விளைவாக மாணவர்களின் அடிப்படைக் கற்றல் திறன் பாதிக் கப்படும் அபாயமும் உண்டு. அதுமட்டுமல்லாது இது பெற்றோரிடையே குழப்பங்களையும் ஏற்படுத்தும். பாடப் புத்தகங்கள் இல்லாமல் குழந்தைகள் என்ன கற்றுக் கொள்கிறார்கள் என்பதில் பல பெற்றோர் தெளி வின்மையில் இருப்பார்கள். அதனால் பெற்றோருக்கு இந்த முறை பற்றிய விழிப்புணர்வு அளிப்பதும் அவசியம்.

எல்லா மாற்றங்களும் எதிர்ப்புகளையும் சவால் களையும் சந்தித்துப் பின்னரே உறுதியான வடிவம் பெறுகின்றன. கற்றல் கையேடு முறைமையும் அதேபோல் சவால்களைக் கொண்ட ஒரு முன்னேற்றமான முயற்சி. அதை வெற்றிகரமாக்க அரசாங்கம் தெளிவான திட்டமிடல், தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி, பெற் றோர் விழிப்புணர்வு, மற்றும் கல்வி நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் முன்னேற்ற வேண்டும். சிறந்த திட்ட மிடலுடன் செயற்படுத்தப்பட்டால் இது இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருக்கும். ஆனால் அவசரமாகவும் திட்டமிடலின்றியும் செயற் படுத்தப்படுமானால், அது கல்வி முன்னேற்றத்துக்கு பதி லாக கல்விக் குழப்பங்களுக்குக் காரணமாக மாறிவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# கழிப்பறை வசதிகள் இன்றி நாட்டில் 13,000 குடும்பங்கள்

**கொழும்பு, நவ.5**
**நாட்டில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் கழிப் பறை வசதியின்றி உள்ளன என்று மக்கள் தொகைக் கணக் கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவு களில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

2024 மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்பின்படி நாட்டின் 6,111,315 குடும்ப அலகு களில் 0.2 சதவீதம் அதாவது, 13 ஆயிரத்து 326 குடும்பங்கள் கழிப் பறை வசதிகள் இல்லாதுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

92.2 சதவீத வீடுகளில் தனியாகக் கழிப்பறைகள் உள்ளன என்றும், 5.8 சதவீதம் மற்ற குடும்பங்களு டன் கழிப்பறை வசதிகளைப் பகிர்ந்துகொண்டுள்ளன என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

சுமார் 0.2 சதவீதம் பேர் பொதுக் கழிப்பறைகளை நம்பியுள்ளனர். 0.2 சதவீதம் பேர் திறந்தவெளி களைப் பயன்படுத்துகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் பொது கழிப்பறைகளைப் பயன்படுத்தும் அதிக எண்ணிக்கையிலான குடும் பங்கள் பதிவாகியுள்ளன. 4 ஆயி ரத்து 518 குடும்பங்கள் இவ்வாறு பொது கழிப்பறைகளைப் பயன்படுத் துகின்றன என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. கிராமப்புற சுகாதாரத் திட் டங்களை வலுப்படுத்தவும், ஒவ் வொரு வீட்டிற்கும் பாதுகாப்பான மற்றும் தனிப்பட்ட கழிப்பறைகளை உறுதிசெய்வதற்காக உட்கட்ட மைப்பை மேம்படுத்தவும் வலியு றுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



## 'வட்ஸ் அப்' பணமோசடி அதிகரிப்பு

கொழும்பு, நவ.5
'வட்ஸ் அப்' வழியாகப் பணம்கோரும் மோசடி தொடர்பான முறைப்பா டுகள் அதிகரித்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

கடந்த சில நாள்களாக குற் றப் புலனாய்வுத் திணைக் களத்துக்கு இதுபோன்ற முறைப்பாடுகள் அதிக அளவில் கிடைத்துள்ளன. வட்ஸ்அப் குழுக்களைப் பயன்படுத்தும்போது இந்த மோசடிகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## ரயிலுடன் மோதுண்டு ஓட்டோச்சாரதி சாவு!

கொழும்பு,நவ.5
மட்டக்களப்பிலிருந்து - கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் ரயிலில் முச்சக்கர வண்டியொன்று மோதி விபத்துக்குள் ளானதில் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வல்பொல ரயில் நிலையத்துக்கு அரு கில் இடம்பெற்றுள்ளது. இந்த விபத் தில் மேலும் 2 பெண்கள் படுகாய மடைந்த நிலையில் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கார் விபத்து; ஒருவர் பலி




கொழும்பு,நவ.5
கித்துல்கல பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கித்துல்கலவில் இருந்து ஹற் றன் திசை நோக்கிப் பயணித்த கார் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள்மீது மோதி யதில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரி ழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் கிதுல்கலப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## புகையிரத சேவைக்கு பெண்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, நவ.5
புகையிரத இயந்திர சாரதிகள், புகையிரதப் பாதுகாப்பு அதிகாரி, புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் புகையிரத மேற்பார்வை முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு பெண் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை- ஐப்பசி 20
06.11.2025
சுபநேரம் : 07.35 - 09.05
ராகுகாலம் : 01.35 - 03.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் புலம்பெயர்வதாலேயே குடித்தொகைப் பரம்பலில் வீழ்ச்சி!



## கலாசாலை அதிபர் லலீசன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,நவ.5**

**இலங்கையின் சனத்தொகையில் தமிழர்களின் தொகை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. தமிழ் மக்கள் அதிகளவில் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறுவதால் இங்கு தமிழர்களின் குடித்தொகை சரிவடைந்துள்ளது என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தெரிவித்துள்ளார். உலக சித்தங்கேணி ஒன்றியத்தின் அனுசரணையில், சித்தங்கேணி ஆன்மிக அறக்கட்டளை நிதியம் நடத்திய வருடாந்த வாசிப்புமாதப் போட்டியின் பரிசளிப்பு விழா வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 1945ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்களை அமைதியான தலைமுறையினர் என்றனர். அவர்கள் பெரிதாக குடித்தொகைப் பெருக்கத்தைக் காட்டவில்லை. 1945ஆம் ஆண்டு உலகப்போர் முடிவடைந்தது. இதன்காரணமாக உலகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அப்போது, உலகத்தில் மக்கள் தொகை குறைந்துவிட்டது என்றும், மக்கள் தொகையை அதிகரிக்க வேண்டும் என்றும் ஒரு கோஷம் எழுந்தது. அந்தக் கோஷம் யாழ்ப்பாணத்திலும் ஒலித்தது. அந்த சந்தர்ப்பத்தில் தான் மிதமிஞ்சிய அளவில் பிள்ளைகளைப் பெற்றனர். 1945-1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஒரு வீட்டில் 10,12 பிள்ளைகளைப் பெற்றனர். அதனால் குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் தற்போது வெளியான இலங்கையின் குடித்தொகை கணக்கெடுப்புத் தரவுகளில் வடக்கு மாகாணம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. தற்போது ஐந்தரை இலட்சம் பேர் மாத்திரமே யாழ்ப்பாணத்தில் உள்ளனர் எனக் கூறப்படுகின்றது. ஏனையோர் புலம்பெயர் தேசங்களில் தஞ்சமடைந்து அங்கே குடித்தொகையைப் பெருக்குகின்றனர்.

இங்கு தமிழர்களின் குடித்தொகை பெருக்கமானது குறைந்திருக்கிறது. ஆனால் இஸ்லாமியர்களின் குடித்தொகைப் பெருக்கம் 10.5 வீதத்துக்கு வளர்ச்சியடைந்துள்ளது. தமிழர்களது குடித்தொகை பெருக்கமானது 11.5 வீதத்திலேயே உள்ளது. தமிழர்களின் குடித்தொகைப் பெருக்கம் மெல்ல மெல்லமாக உயர்கிறது என்று சொல்கின்ற அளவுக்குக்கூட இல்லை- என்றார். (க-27)

# தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 5

சைவ பரிபாலனசபையின் யாழ்ப்பாணம் இல.66 கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. தீட்சை பெற விரும்புபவர்கள் 02122 27678 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அழைத்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



# சாவகச்சேரி வணிகர் மன்ற புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 5

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் சாவகச்சேரி நகர் கிரமாசேவகர் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் க.ஜெயரூபன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போது கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிர்வாகச் செயற்பாட்டறிக்கையும் கணக்கறிக்கையும் வாசிக்கப்பட்டன. வாசிக்கப்பட்ட கணக்கறிக்கை 3 ஆண்டுகளுக்கும் சேர்த்து செய்யப்பட்டுள்ளமையால் போதிய விளக்கம் இல்லாமல் காணப்படுவதாகவும், கணக்கறிக்கை ஒவ்வொரு ஆண்டும் தனித்தனியாக வழங்கப்படவேண்டும் எனவும் மன்ற அங்கத்தவர்களால் கோரப்பட்டு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து அத்துடன் பழைய நிர்வாகசபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. இதன்பிரகாரம் தலைவராக மு. அகிலன், செயலாளராக மு.கோகுலறாஜ், பொருளாராக ம.உதயகுமார் ஆகியோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25, 28)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், நவ.5

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகி காலை 11 மணி வரை நடைபெறவுள்ளது. (ச-41-66)

# காற்றாலை விசிறி ஏற்றிச்சென்ற வாகனம் தடம்புரள்வு

திருகோணமலை,நவ.5

திருகோணமலை துறைமுகத்திலிருந்து மன்னாருக்குக் காற்றாலைக்கான உபகரணத் தொகுதியை ஏற்றிச் சென்ற வாகனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

துறைமுகத்தின் வெளிப்புற வாயில் அருகே தடம்புரண்டு வாகனம் கவிழ்ந்ததில், திருகோணமலை துறைமுக வளாகத்தில் உள்ள புத்தகோவில் மற்றும் கொள்கலன் கட்டடம் என்பவற்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் பயணி காயமடைந்துள்ளனர். (ச-50)



# பிரதோச விரத வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.5

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் சோமவாரப் பிரதோச விரத வழிபாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. சிறப்பு அபிஷேகம், பூஜை, வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இடப வாகனத்தில் சுவாமி உள்வீதியுலா வரும் திருக்காட்சி நடைபெற்றது. (ச-41-66)




# முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், முதியோர் கௌரவிப்பு நிகழ்வு மாதர் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ். மணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குகநாதன் கலந்துகொண்டார். (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான 2ஆவது மீள்கேள்வி அறிவித்தல் - 2026

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2026ஆம் ஆண்டிற்கு (01.01.2026-31.12.2026) வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 06.11.2025 – 14.11.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 14.11.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 14.11.2025 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்வி விண்ணப்பபடிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, இரு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையிலும் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 14.11.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன்,
உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **12,650.00** |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | **8,354,090.00** |
| 3 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | - | 1,000.00 | 25,000.00 | **1,144,940.00** |
| 4 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,007,280.00** |
| 5 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **206,270.00** |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 6 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 100,000.00 | **4,187,790.00** |
| 7 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 45,000.00 | **1,872,440.00** |
| 8 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 15,000.00 | **582,930.00** |
| 9 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 5,000.00 | **50,790.00** |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 10 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **463,320.00** |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 11 | உரும்பிராய் மத்திய சந்தை | - | 1,000.00 | 40,000.00 | **1,613,600.00** |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2025.10.05 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2025.11.05

## Invitation for Bids (IFB)
## VAVUNIYA SOUTH TAMIL PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vavuniya South Tamil Pradeshiya sabha, Vavuniya now invites sealed bids from eligible and qualified bidders for the goods listed in the table below;

| S NO | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (LKR. Mn) | Required registration | Required Bid Security: Bond Amount (Rs.) | Required Bid Security: Validity Period | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | PSDG/NP/VAV/ VSTPS/2025/WM/03 | Improvement of solid waste management activities (Improvement of Slaughter house waste removal tractor tailor with tailer hood) | 1.02 | Business Registration | 11,000.00 | 2026.02.05 | 35 Days |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. Interested eligible bidders may obtain further information from Vavuniya South Tamil Pradeshiya sabha [Telephone No: 0242225737, Fax No: 0242050067] E. mail – npvstps@yahoo.com from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Chairman, Vavuniya South Tamil Pradeshiya sabha, Neriyakulam Road, Nelukkulam, Vavuniya
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule/ Bidding Data" of the Procurement Document for works and goods
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Chairman, Vavuniya South Tamil Pradeshiya sabha, Neriyakulam Road, Nelukkulam, Vavuniya from 2025.11.06until 2025.11.19 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a non-refundable fee of Three thousand Five hundred Rupees (Rs 3,500.00) The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Vavuniya South Tamil Pradeshiya sabha, Neriyakulam Road, Nelukkulam, Vavuniya on or before 20th November, 2025 and 10.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' represen tatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 2025.11.13 at 10.30 Hrs at the Vavuniya South Tamil Pradeshiya sabha, Neriyakulam Road, Nelukkulam, Vavuniya

The address (es) referred to above is (are):
Chairman,
Divisional Procurement Committee (Div.PC)
Vavuniya South Tamil Pradeshiya Sabha
Neriyakulam Road, Nelukulam, Vavuniya.

# மனைவியின் இறுதிச்சடங்கன்று கணவனும் உயிரிழந்த சோகம்

கொழும்பு,நவ.5

மனைவியின் இறுதி சடங்கன்று, கணவனும் உயிரிழந்த சோகச்சம்பவம் கேகாலையில் இடம்பெற்றுள்ளது.

கேகாலை புனித மேரி பெண்கள் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரான குணதாச அதிகாரி ஆராச்சி (வயது -77) , எழுத்தாளர் தலதா விஜேரத்ன(வயது - 76) ஆகியோரோ இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தனர். மனைவியின் உடல்நிலை பாதிப்புக் காரணமாக, இருவரும் இலங்கைக்குத் திரும்பினர். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை மனைவி உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. மனைவியின் பிரிவால் ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக, மதச் சடங்குகளை முடித்துவிட்டு தகனத்துக்குச் செல்லாமல் கணவர் வீடு திரும்பியுள்ளார்.

அவரது மனைவியின் உடல் தகனம் செய்யப்பட்டபோது, திடீர் மாரடைப்பு காரணமாகக் கணவரும் உயிரிழந்துள்ளார். (சு-இ)



யாழ்.சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் அதிபராக திருமதி காயத்திரி அஜந்தன் கடந்த திங்கட்கிழமை பதவியேற்றார். (ச-25, 17)

**தோட்ட வேலை செய்வதற்கு ஆள் தேவை**

45 - 50 வயதிற்கு உட்பட்டவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 977 3286

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 10 - 1928



மறைவு 01 - 11 - 2025

### சின்னத்துரை லோகநாதன்

நவாலியை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை லோகநாதன் அவர்கள் கடந்த (01.11.2025) சனிக்கிழமை இலண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான SAB குமாரசூரியர் - கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் சகோதரரும், செல்வமலரின் பாசமிகு கணவரும், ஸ்கந்தவேல், செம்மணச் செல்வி, ஞானவேல், மீரா, கிரித்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகா, சண்முகரத்தினம், கஸ்தூரி, கிரூபன், பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாதுரி, ஹரீந்திரன், இஹானி, அவந்திகா, பிரித்திக்கா, கவினி, ஆதினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
0777107231 , 0779586600
00447563278709
00447921435202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது சபையின் தலைமை அலுவலகத்தில் காணப்படும் மரத்துண்டங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

**காலம் : 12.11.2025 புதன்கிழமை காலை 10.30 மணி**
**இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்கக்கூடிய கட்டணம் ரூபா 1000.00 இணையும் மீளளிக்க முடியாத கட்டணம் ரூபா 250.00 இணையும் ஏலவிற்பனை தினத்தன்று மு.ப. 10.30மணிக்கு முன்பாக தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சித்தி பெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி மரத்துண்டங்களை அப்புறப்படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்தில் விடப்படும் மரத்துண்டங்கள் சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் மேலதிக தகவல்களுக்கு 0212240017 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

தி.பிரகாஷ்
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
05.11.2025

(CR 46217) A

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

## திருநெல்வேலி காணி விற்பனைக்கு

பரப்பு : 01, 02, 2 1/4
பலாலி வீதி : 75 மீற்றர்
திருநெல்வேலி சந்தி:300 மீற்றர்

தொடர்பு:
**077 253 2575**

(CS 30653) A

## கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம் நவ.5

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் திறந்த கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும் இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவைப் பணிமனையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. 'தேசிய நிலைமைகளும் சர்வதேச சூழலும்' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் சமூக அரசியல் செயற்பாட்டாளர் க.சீலன் தொடக்க உரை ஆற்றுவார். முக்கியமான அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை முன்வைப்பர். அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும்.

(ச-66,40)

## தோட்ட வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அமைந்துள்ள தோட்டம் ஒன்றுக்கு வேலை செய்வதற்கு ஆண் வேலையாள் தேவை. தங்கி நின்று வேலை செய்வதற்கு உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் மாதம் 75,000/- . வெளிமாவட்டத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**குறிப்பு :- தோட்ட வேலை தெரிந்தவர்கள் மட்டும்**

தொடர்பு:- **076 739 0413**

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றுக்கு மேசன், கூலியாட்கள். உப ஒப்பந்ததாரர்கள் நாவற்குழி, நுணாவில் பகுதியில் வேலை செய்வதற்கு தேவை.

**070 1948 495**

(CS 59816) A

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்:

1. சுத்திகரிப்பு பணியாளர்கள்
2. பாதுகாப்பு பணியாளர்கள்
3. Electrician
4. Kitchen Helpers
5. IT Technician
6. Receptionist-Male
7. Banquet Reservation Officer
8. காசாளர்.
9. Room Attendant

தொடர்புகளிற்கு :
Phone No - 0763453485/ 0766248529
E-Mail - hrvalampuri@gmail.com

## Young Men's Christian Association Jaffna

YMCA JAFFNA ESTD:1890

### VACANCIES

The Young Men's Christian Association (YMCA) of Jaffna, a Christian organization dedicated to youth development, community service, and social responsibility, is seeking a dynamic and committed individual for the below posts.

1. **Post: Liaison Officer**
   Salary: **Rs. 37,600/-**
   After confirmation, entitled to fixed allowance of **Rs.8000/-**

**Requirements:**
- Proficiency in English (both written and spoken)
- Excellent interpersonal and communication skills
- Willingness to work long hours
- Competence in MS Office
- Age: Between 22 – 35 years

**Key Responsibilities**
Responsible for Stakeholder Communication,
Program Coordination,
Information Management
Relationship Building etc…

2. **Post: Accounts Assistant**
   Salary: **Rs. 33,950/-**
   After confirmation, entitled to fixed allowance of **Rs.8000/-**

**Requirements:**
- G.C.E. A/L in Commerce stream (AAT qualification preferred)
- Proficiency in QuickBooks accounting software
- Minimum 2 years of relevant experience
- Age: Below 35 years

**Key Responsibilities**
- Maintain and manage accurate financial records
- Prepare financial reports and statements
- Handle QuickBooks accounting.
- Ensure compliance with financial regulations and organizational policies
- Work collaboratively with the finance team to achieve organizational objectives

3. **Post: Steward பராமரிப்பாளர்**
   Work related to Room Maintenance – Hostel cum Office Peon அறை மற்றும் அலுவலக பராமரிப்பு

**Salary: Negotiable சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்**

After conformation all staff will be entitle for Medical Claim of **Rs.24,000/-** per year
**EPF** and **ETF** will be paid

**To Apply:**
Please submit your updated Curriculum Vitae to the **General Secretary via Registered Post, YMCA, 109, Kandy Road, Jaffna,** on or before **24th November 2025.** *Please mention the post applied for on the top left corner of the envelope. Only shortlisted candidates will be called for the final interview.*

General Secretary
YMCA Jaffna

## வேலை ஆட்கள் தேவை


நாகர் கோவில் கிழக்கில் இயங்கும் ஆடு, மாடு, கோழிகள் கொண்ட பண்ணை ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
18-50 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
குடும்பத்துடன் தங்க வசதியுடன் மற்றும் காலை, மதிய உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
07.11.2025 திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:-
**+44 750 750 8290, 075 739 7103**

(CS/59817) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 02 . 1938
மறைவு 17 . 10 . 2024



**கந்தையா சோமசுந்தரம்**

தேடல் என்றும் முடிவு தொட்ட ஒன்று தானே,
இன்று எம்மிடத்தில் மட்டும்
நீங்கள் என்ற தேடலின் அர்த்தம் வேறாக....
வீட்டு தேசம் எல்லாம் உங்கள் விம்பம்.
ஆழப்புதைந்த உங்கள் நினைவுகள்
நீங்கள் இல்லை என்பது
...டென தட்டும் போதெல்லாம்
ஆறுதல் இன்றி கனக்கிறது.
கனம் கரைய்யது விழி மட்டுமே....

...

குடும்பத்தினர்

(CS/30593) J-1

## ஐப்பசி பரணி உற்சவம்

யாழ்., நவ.5

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஐப்பசிப் பரணி உற்சவம் இன்று மாலை இடம்பெற வுள்ளது. மாலை 3.30மணிக்கு வைரவர் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 5மணிக்கு ஸ்ரீசக்கர பூசை நடைபெறும் அதனைத் தொடர்ந்து மாலை 5.30மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று அம்பாள் மற்றும் வைரவப் பெருமான் ஆகியோர் உள்வீதியுலா வருவார்கள்.

(ச-159,40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி
தவிர்க்கமுடியாதது.
துன்பமடைவது
தவிர்க்கக்கூடியது.


- ஹருகி முரகாமி

புதன் பொய்கை

05.11.2025
புதன்கிழமை

# பண்பாட்டு வாசம் வீசும் மட்பாண்டக் கைத்தொழில்

▪ பவித் அருள்வசந்



பூகோளமயமானதன் பிற்பாடு இலங்கையில் பண்புருமாற்றங்கள் சாதாரணமாகிவிட்டன. ஒவ்வொரு மாற்றங்களின் விளைவும் மனிதனை தொழில்நுட்ப யுகத்துள் அழைத்து வந்துவிட்டன. அத்தகைய தொழில்நுட்ப யுகத்துக்குள் இருந்துகொண்டு பழமையின் ருசியை உணர்ந்து 'ருசியை' உணர்த்தும் பதிவே இது.



'பழையன கழிதலும் புதியன வருதலும்' என்ற வரிகள் காலச்சக்கரச் சுழற்சி விதி, பழையன மீண்டும் வருதலும் புதியன மழுங்கிப்போதலும் என்ற புதிய வரிகளை ஏற்கிறது.

ஆம்! காலாகாலமாக எமது பாரம்பரியத்தில் இருந்த ஒரு கலைநயம் மிகுந்த கைத்தொழிலே மண்பாண்டக் கைத்தொழில். விவசாய யுகத்தில் சில்லு கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து செய்யப்பட்ட இந்த மட்பாண்டம் இன்றுவரை மாறாத பாரம்பரியமாகக் காணப்படுகின்றது.

அலுமினியம், நெகிழி, இரும்பு, சில்வர் போன்ற பல மூலப் பொருள்களைப் பயன்படுத்தி பாத்திரங்கள் அதிகம் உற்பத்தி செய்யப்பட்ட காலப்பகுதியில், அதிகளவில் பேசப்படாத மண் பாண்டங்களானவை இன்று விலை உயர்ந்த உணவகங்களிலும், தங்குமிடங்களிலும் அழகுசாதன பொருள்களாகவும் மற்றும் சமையல் உபகரணங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மண்சட்டியில் சமைத்துச் சாப்பிடுபவர்களுக்கு நோய்கள் ஏற்படும் வீதம் குறைவென்பது பொதுமைப்படுத்தப்பட்ட உரையாடலாகும். கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியில் அமைந்திருக்கும் டிலக்சிகா மட்பாண்டக் கைத்தொழில் நிறுவனமானது கணவன், மனைவி இருவரின் உரிமையாண்மையின்கீழ் முப்பது வருடங்களுக்கு மேலாக இயங்கிவருவதுடன் உள்நாடு, வெளிநாடு போன்றவற்றிற்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பரிவர்த்தனையும் செய்யப்படுகிறது. மட்பாண்டம் செய்வதற்கான களிமண் நெடுங்கேணியில் இருந்து கனரகவாகனவூர்தி மூலம் வருடத்திற்கு ஒருமுறை தேவையான அளவு கொண்டுவரப்படுகிறது.



குறித்த மட்பாண்டக் கைத்தொழிற் பேட்டையைச் சூழ வேறு மட்பாண்ட உற்பத்தி நிறுவனங்கள் காணப்படுவது அவர்களுக்கான சவாலாக இருந்தாலும் இவர்களின் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் அவர்களது உறவினர்கள் என்பதால் உள்ளக ரீதியில் அவர்களிடம் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படுவதில்லை. இது அவர்களின் பலமாகவும் உள்ளது. இருப்பினும் மழைக்காலம் வந்துவிட்டால் மண் கரைதல், மண்பாண்டம் உலராமல் இருத்தல் போன்றனவும் மட்பாண்டம் செய்வதில் ஏற்படும் இடப்பற்றாக்குறை மண்ணரைக்கும் இயந்திரத்தின் கோளாறு போன்ற அடிப்படைச் சவால்களையும் அவர்கள் எதிர்நோக்குகிறார்கள் எனவும் இவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்திடம் உதவிகளைக் கேட்டிருப்பதாகவும் அவர்கள் கூறியிருந்தார்கள்.

இதைவிட தம்மால் செய்யப்பட்டுவரும் இந்தப் பரம்பரைத் தொழிலை எதிர்காலத்தில் தனது இரு மகள்களும் மேற்கொள்வார்களா..? இல்லையா என்பது அவர்களது மனநெருடலாக இருக்கிறது. இந்தக் கைத்தொழில் அவர்களுக்கு தினமும் புதுவிதமான உற்சாகத்தை தருவதாகவும் தமக்குப் பிடித்த வேலை என்பதால் எத்தகைய களைப்பு எனினும் தமக்கு அது பெரிதாகத் தெரியவில்லை எனவும் அவர்கள் பெருமையாகக் கூறினர்.

செய்யும் தொழில் தெய்வம் எனும் முதுமொழிக்கு ஏற்றவாறு தெய்வத்தைப் போல தமது தொழிலையும் அவ்வளவு மரியாதையுடன் நேசிக்கின்றனர். குறித்த மட்பாண்டப் பேட்டைக்குச் செல்ல முன்பு பல்வேறு எண்ணவோட்டங்கள் மட்பாண்டம் தொடர்பாக இருந்தது. எனது கேள்விக்கான அவர்களின் ஒவ்வொரு பதிலும் புதிய ஒரு சிந்தனையை கிளறிக்கொண்டே இருந்தன. மட்பாண்டப் பேட்டையின் சூழலும், வாசனையும், எனக்கான புதிய உணர்வை ஊட்டியது.

“

காலாகாலமாக எமது பாரம்பரியத்தில் இருந்த ஒரு கலை நயம் மிகுந்த கைத்தொழிலே மண்பாண்டக் கைத்தொழில். விவசாய யுகத்தில் சில்லு கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து செய்யப்பட்ட இந்த மட்பாண்டம் இன்றுவரை மாறாத பாரம்பரியமாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செம்மணிப் போராட்டத்தில் சிங்களக் குரல்!

ஜனுக்ஷி ஸ்ரீகாந்தன்


செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரித் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அணையா விளக்குப் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள், கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டங்கள் என இந்தப் போராட்டங்கள் நீள்கின்றன.

இதன் தொடர்ச்சியாக, நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று சிங்கள மக்கள் சிலர் இணைந்து செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரிப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர். இலங்கையில், இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை மேம்படுவதற்கு எத்தகைய மாற்றங்கள் ஏற்பட வேண்டுமோ, அத்தகைய மாற்றங்களைத்தான் இந்தப் போராட்டம் உணர்த்தியுள்ளது. இத்தகைய ஆதரவுக் குரல்களுடன், தமிழர்கள் தமது எதிர்காலத்தை இறுகப் பிணைக்கவேண்டும்.

போரின் பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியற் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, பௌத்தமயமாக்கல், இராணுவக் குறைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், புதிய அரசியலமைப்பு மற்றும் செம்மணிப் புதைகுழி என எத்தனையோ விடயங்களில் ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியாகப் போராடிவருகின்றனர். அந்தப் போராட்டங்கள் மீண்டும், மீண்டும் ஒரு குறுகிய வட்டத்துக்குள்தான் நிற்கின்றதே தவிர, இத்தகைய இடதுசாரித் தலைவர்களை அரவணைத்ததாகவோ அல்லது முன்னிலைப்படுத்தியதாகவோ வரலாறு இல்லை. இனவாதச் சகதி நிறைந்த இலங்கை போன்றதொரு நாட்டில் இத்தகைய கூட்டுப் போராட்டங்கள் அவசியம் தேவை.

தமிழ்த்தலைமைகள் தமது அரசியலோட்டத்தில் திஸ்ஸ விதாரண, டியூ குணசேரக, சிறிதுங்க ஜயசூரிய, ஜெஹான் பெரேரா போன்ற இடதுசாரி ஆளுமைகளுடன் ஒன்றித்துப் பயணப்பட வேண்டும். ஆனால், இந்த விடயத்தில் வரலாற்றுத்தவறுகள் தொடர்ந்தும் இழைக்கப்பட்டு வருகின்றன.


இலங்கை சுபீட்சமான நாடாக மாற்றம்பெற வேண்டுமாயின், அனைத்து மக்களுடைய பிரச்சினைகளுக்காகவும், அனைத்துச் சமூகங்களுக்குள் இருக்கக்கூடிய இடதுசாரிகளும் குரல்கொடுக்கவேண்டியது அவசியம்.



## வருண பகவானே! கருணை கொள்வாயே!

வருண பகவானே! வான்மழைத் தெய்வமே!
வருக! உன்றனது வரவை எதிர்பார்க்கின்றோம்!
தருக மழையதனை! நீரின்றிப் பயிர் வாடும்
நிலைநீங்கி நிலத்தினிலே உற்பத்தி வளமதுவும்
பெருகும் வழிமலர வானம் பார்த்த இப்பூமியிலே
போதியதாம் நீர் நிறையும் தன்மையினைத் தந்திடவே
கருணை கொள்வாய்! களத்தில் பயிர் செழித்து
காசினியில் யாவருமே உணவைப் பெற்றிடவே

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்



## திரையில் 'தேவதை'



நடிகர் நாசரின் நெறியாள்கையில், 1997 இல் உருவாக்கப்பட்ட 'தேவதை' திரைப்படம் கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் எதிர் வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்குத் திரையிடப் படவுள்ளது.

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தால், இலவசமாகத் திரையிடப்படவுள்ள இந்தத் திரைப்படமானது, மானுட உணர்வுகளின் வெவ்வேறு நிலைகளை யதார்த்தமும் புனைவும் கலந்த வடிவத்தில் வெளிப்படுத்தும் வித்தியாசமான கதைக்களத்தைக் கொண்டது என்பது சிறப்பம்சமாகும்.

புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரநடுகை



## தமிழ் மக்களின் தலையாய கடமை

சி.நற்குணலிங்கம்,
நெல்லியடி.

வடமாகாணசபை இயங்கியபோது கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. கார்த்திகை மாதம் எம் மண்ணுக்கு மழைநீரைச் சிந்துகின்ற மாதமாகும். 2014ஆம் ஆண்டுமுதல் எமது வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்வையும், எமது மண்ணின் பசுமையையும் பாதுகாக்கும் இந்தச் சூழலியல் செயலானது நடைபெற்று வருகிறது. வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலும் எனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். 'மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்' என்ற சீனப்பழமொழிக்கு அமைய, எமது நிலத்தை பசுமை வாய்ந்ததாகவும், இயற்கையின் வனப்பை இரசிப்பதற்குரிய ஓர் இடமாகவும் மாற்றப்படவேண்டிய பொறுப்பு இந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

### தொலைநோக்குச் சிந்தனை

மரநடுகை நிகழ்வானது தொலைநோக்குடன் கூடிய உணர்வு பூர்வமான சிந்தனை. நாட்டப்பட்ட மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. தெருவோரத்தில் நாட்டப்பட்ட மரம் வாடியுள்ளதென்றால் அதற்கு அயலில் உள்ள வீட்டுக்காரருக்கு ஈரமனமும், பொதுச்சிந்தனையும் இல்லை என்றுதான் அர்த்தம் கொள்ளலாம். மரங்களே எமது ஆதித்தெய்வங்கள். மரங்களை வணங்குகின்ற தொன்மையான வழிபாட்டு முறையைக் கொண்ட நாம் மரங்களை நட்டுப் போற்றும் மாண்பிலிருந்து விலகலாமா? எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்கவைத்திருப்பவை உள்ளூர் மரங்கள்தான். உயிர்ச் செழிப்பின் உயிர் நாடியாய் விளங்குபவை உள்ளூர் மரங்களே.

மரங்களை நடுகைசெய்வதோடு தொடர்ச்சியாக அவை பராமரிக்கப்படுவதில் கூடிய கவனம் தேவை. எதிர்காலம் குறித்த நம்பிக்கையான விதைப்பாக பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்கள் நாட்டப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும். மரங்கள் அழிவது, அழிக்கப்படுவது கவலைக்கு உரிய விடயமாகும். இயற்கையை அழிப்பது சுலபம். இயற்கையை அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம் என்ற பாடத்தை நன்கு கற்றுக்கொள்ளவேண்டும். இப்போது சூழல் பாதுகாப்பினதும், மரநடுகையினதும் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது. எமது சுற்றாடலை பசுமையாகவும், அழகாகவும் பேணுவதன்மூலம் ஆரோக்கியமான வாழ்வை வாழலாம். மரங்களை நாட்டுவது எம் தேசத்தைக் குளிரச் செய்யும் சூழலியல் செயலாகும்.

சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத் தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதன் சிந்தனையற்ற முறையில் பசுமையான காடுகளை அழித்து வருகின்றான். தொடர்ச்சியாக அழிக்கப்படுமாயின் ஒரு காலத்தில் அவ்விடம் பாலைவனம்போல் காட்சியளிக்கும்.



### இயற்கைச் சமநிலையை இழக்காதிருப்போம்!

ஒவ்வொரு ஜீவராசிகளும் உயிர்வாழ நல்ல சுத்தமான காற்று அவசியம். எமது உடலில் உள்ள குருதி சுத்தமடைந்து அதில் உள்ள கழிவுகளைக் கரியமில வாயுவாக மாற்ற நல்ல பிராணவாயு நிறைந்த காற்றைச் சுவாசிக்கவேண்டும். செடி, கொடி, படர் தாவரங்கள், சிறிய, பெரிய மரங்களின் இலைகள் யாவும் சுவாசத்தில் ஈடுபடும்வேளை காற்றில் உள்ள கரியமில வாயுவை ஏற்றுக்கொண்டு பிராணவாயுவை வெளிவிடுவதால் மனிதன் அதன் சுவாசத்தின்மூலம் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்கின்றான். இவ்வாறிருக்க நாம் இவற்றை அழிப்பது எந்த அளவுக்கு அறிவுபூர்வமான விடயமாகும். இலவசமாக ஆயுளை நீடிக்க வாய்ப்புள்ளபோது அதைவிடுத்து தாவரங்களை அழிப்பது எந்த அளவுக்குக் கீழ்த்தரமான விடயம் என்பதை உணர்ந்து வாழவேண்டும். வாழ்வியல் காலத்தைச் சுருக்கிக்கொள்ள நாமே காரணமாக இருக்கக்கூடாது. சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத் தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதன் சிந்தனையற்ற முறையில் பசுமையான காடுகளை அழித்து வருகின்றான். தொடர்ச்சியாக அழிக்கப்படுமாயின் ஒரு காலத்தில் அவ்விடம் பாலைவனம்போல் காட்சியளிக்கும். அழிக்கப்படுவதால் ஒட்சிசன் வாயு குறைவடையும். மனிதன் சீவிக்கவேண்டும் எனில் ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர் செறிவான ஒட்சிசன் வாயுவை சுவாசிக்கவேண்டும். காடுகள் அழிக்கப்படுவதுடன் நிற்காது சிலர் நெருப்பும் வைக்கிறார்கள். இதனால் ஏற்படும் தீச்சுவாலையால் ஏற்கனவே பாதிப்பு அடைந்துள்ள ஓசோன் படலம் மேலும் அழிவுக்கு உட்படுகின்றது. சுற்றுச் சூழலியல் என்ற கோட்பாட்டை ஒழுங்காகப் பின்பற்றாது போனமை அதன் குறிக்கோள்களின் உண்மையான நோக்கங்களிலிருந்து விலகிச் செல்லக் காரணமாகிறது. சூழலின் இயற்கைச் சமநிலையைப்பற்றி பூரணமாக அறியாமல் இருப்பதும் இந்த அழிவுக்குக் காரணமாகும்.

'பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ, வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதைவிட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது' என்கிறார் ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு மார்ட்டின். மூதாதையர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடம் ஒன்று உண்டு. அதாவது அவர்கள் மரம், செடி, கொடி என்பவற்றுடன் 'சகவாழ்வுக் கொள்கை'க்கு இசைவாக வாழ்ந்தனர் என்பதாகும். இது அகில இயற்கைத் தத்துவமாகும். நவீன மனிதன் இந்தக் கொள்கையிலிருந்து மாறுபட்டதன் விளைவே சமகால வாழ்வியலுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இது ஒரு பாதகமான பின்னணியாகும். நிலைதகு வாழ்வுக்கு தாவரங்களை முகாமைத்துவப்படுத்த உணர்வுபூர்வமாக ஆர்வம் காட்டவேண்டும்.

எதை, எப்போது, செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என நாம் சிந்திக்கத் தொடங்கினாலே எமக்குள் எதையும் நியாயமாக நேர்மையுடன் ஒழுக்கத்துடன் செய்யவேண்டும் என்ற பக்குவம் ஏற்படும். மரங்களின் நடுகையைப் பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டும். தொடரட்டும் மரநடுகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நினைவுகளில் இன்றும் கெந்தல்கோடு

■ பானுஷா நிமல்

தமிழரின் கிராமிய வாழ்வியலில் மிக பிரதான பங்காக பாரம்பரிய விளையாட்டுகள் காணப்படுகின்றன. உடல் மற்றும் உள்ளம் சார்ந்து தம்மைத் துடிப்பாக வைத்துக் கொள்கிற பண்பையும் தமக்கிடையே ஒற்றுமையுணர்வை மேம்படுத்தும் திறனையும் மக்கள் விளையாட்டுகளினூடாக வளர்த்துக் கொண்டார்கள். ஒவ்வொரு கிராமமும் தத்தம் பண்பாடுகளின் தன்மைக்கேற்ப விளையாட்டுகளைக் கொண்டிருக்கின்றன. விளையாட்டுகளை அவற்றின் தன்மைக்கேற்ப மற்றும் விளையாடுபவர்களின் வயதுக்கேற்ப பல வகைகளாகப் பிரிக்கலாம். அதனடிப்படையில் சிறுவர் சிறுமியர் விளையாட்டுகளில் 'கெந்துங்கோடும்' ஒன்றாகும்.

### விளையாட்டின் நியதி

கெந்துங்கோடு விளையாட்டால் பொறுமை, சிந்திக்கும் ஆற்றல் என்பன மேம்படும். பெரும்பாலும் இதை வெளிமுற்றங்களில் விளையாடுவார்கள். கூடுதலாகப் பெண்பிள்ளைகளே இதனை விரும்பி விளையாடுவார்கள். நீள் சதுரத்தை நீளப்பாடாகக் கீறி நீளப்பாடாக நடுவேயும், அகலப்பாடாக நான்காகவும் பிரித்துக் கோடு போட்டுவிட்டால் விளையாடுவதற்கான தளம் தயார். கால்களில் குத்திவிடாமல் இருக்க ஓட்டுத்துண்டைச் சரியான முறையில் தேய்த்து மட்டப்படுத்தி வைத்திருக்க வேண்டும். இந்த ஓட்டுத்துண்டைச் சிப்பி என்றே சொல்வோம். அதுவும் கிடைக்காத பட்சத்தில் சப்பையான ஒரு சிறுகல் கூட விளையாடப் பயன்படுத்தப்படும். எட்டுச் சதுரங்கள் கொண்ட இப்பெட்டியில் இடது பக்கம் நான்கு பெட்டிகளும், வலது பக்கம் நான்கு பெட்டிகளும் இருக்கும். விளையாட்டை இடது பக்கம் இருந்தே தொடங்க வேண்டும். இடது பக்கமாகப் போகும் போது ஐந்தாவது பெட்டி அதாவது வலது பக்கத்தின் மேற்பெட்டி வீடு இங்குக் காலாறி ஓய்வெடுக்கலாம்.



### எப்படி விளையாடுவது

சிப்பியை இடது பக்க முதற் பெட்டியில் போட வேண்டும். போடும்போது சிப்பி கண்டிப்பாகப் பெட்டிக்குள் விழவேண்டும். வெளியிலேயோ கோடுகளின் மேலோ வீழ்ந்துவிடக்கூடாது. பின்னர் ஒற்றைக்காலால் கெந்தி, அந்தச் சிப்பியை மிதிக்க வேண்டும். ஒரு கெந்தலிலேயே மிதித்துவிடவேண்டும். மிதித்த சிப்பியைக் குனிந்து கையால் எடுத்துக் கொண்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பெட்டிகளுக்குள் கெந்தி ஐந்தாவது பெட்டிக்குள் இரண்டு கால்களையும் வைத்து நிற்கலாம். பின்பு மீண்டும் ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் ஒற்றைக் காலால் கெந்தி வெளியில் வர வேண்டும். இதேமுறையில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போட்டு இதே ஒழுங்கில் சென்று மிதித்து, எடுத்துக் கொண்டு வெளியில் போக வேண்டும். ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போடும் போது இடது பக்க மூலையில் நின்றே போடவேண்டும்.

எட்டுப் பெட்டிகளும் விளையாடி முடிந்தபின், இப்போது சிப்பியை முதற்போலவே போட்டு, ஒற்றைக்காலால் கெந்தி மிதிக்கவேண்டும். ஒரு கெந்தலிலேயே மிதித்து விடவேண்டும். மிதித்த சிப்பியைக் குனிந்து கையால் எடுத்து, தூக்கி வைத்திருக்கும் கால் பாதத்தில் விரல்களின் மேல் வைத்துக்கொண்டு கெந்த வேண்டும். கெந்தும்போது சிப்பி கீழே வீழ்ந்து விடக் கூடாது. எட்டாவது பெட்டிக்கு வந்ததும் சிப்பியைப் பெட்டிக்கு வெளியில் போட்டு விட்டுக் கெந்தி அதை மிதிக்க வேண்டும். அதன் பின்னர், சிப்பியைத் தலையில் வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு பெட்டிகளில் நடக்க வேண்டும். கால் விரல்கள் கோடுகளில் பட்டு விடக் கூடாது. 5 ஆவது பெட்டியில் இரண்டு கால்களையும் வைத்து நின்று கண்களைத் திறந்து பார்த்து விட்டு மீண்டும் ஆறாவது ஏழாவது பெட்டிகளைக் கடந்து எட்டாவது பெட்டிக்கு வந்ததும் தலையில் உள்ள சிப்பியைக் கண்களை மூடியபடி நின்று வெளியில் வீழ்த்தி விட்டுக் கண்களைத் திறக்கவேண்டும். பின் கெந்தி மிதிக்க வேண்டும்.

சரியாகச் சிப்பியில் மிதித்து விட்டால், சிப்பியைக் கையில் எடுத்து எட்டுக்கோட்டுக்குப் புறமுதுகு காட்டி நின்று கொண்டு, சிப்பியைத் தலைக்கு மேலால் எட்டுக்கோட்டுக்குள் எறிய வேண்டும். சிப்பி கோடுகளிலோ, வெளியிலோ, ஐந்தாவது பெட்டிக்குள்ளோ விழக்கூடாது. மூன்று சந்தர்ப்பங்கள் உங்களுக்குத் தரப்படும். சிப்பி எந்தப் பெட்டிக்குள் விழுகிறதோ அந்தப் பெட்டி உங்களுக்குச் சொந்தம். அதாவது அது உங்கள் பழம். நீங்கள் அதற்குள் காலாறிப் போகலாம். மற்றவர்கள் அதைக் கடந்து தான் போகலாம். அவர்கள் அதற்குள் கால் வைக்கமுடியாது. அடுத்த பழத்துக்கு மீண்டும் முதலிலிருந்து விளையாட வேண்டும். இரண்டு பேருக்கு அடுத்தடுத்த பெட்டிகளில் பழம் வந்து விட்டால் மற்றவர்கள் எப்படியாவது பாய்ந்து இரண்டு பெட்டிகளையும் கடக்கவேண்டும். யார் கூடிய பழங்கள் எடுக்கிறாரோ அவரே வென்றியாளர். இது மட்டும் அல்லாமல் இதை வேறு விதமாகவும் விளையாடுவார்கள் சிப்பியை மிதித்த பின் எடுக்காமல் மிதித்துக் கோட்டில் படாமல் வெளியில் தட்டிச் செல்லும் வகையிலும் விளையாடுவார்கள். இவ்வாறாக அந்தக்கால வாழ்வியல் கலை, விளையாட்டு, கல்வி என அனைத்திலும் சிறந்ததாகக் காணப்பட்டது. ஆனால், இன்றைய குழந்தைகளுக்கு இவ்வாறான விளையாட்டுகள் இருப்பது கூடத் தெரியாது. திறன்பேசிகள் பிள்ளைகளை ஆட்கொண்டுவிட்டன. எமது பாரம்பரிய கிராமிய விளையாட்டுகள் வெறுமனே விளையாட்டுகள் மட்டும் அல்ல அவற்றிற்குள் விஞ்ஞான ரீதியான பல நன்மைகளையும் சுமந்து நிற்கின்றன உண்மை. ஆனால் இன்று, அவற்றின் நினைவுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. நம் பண்பாட்டில் கிராமிய விளையாட்டுகள் பெரும் பங்கு பெறுகின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாத்து எமது எதிர்காலத் தலைமுறையினருக்குக் கையளிக்கவேண்டியது எமது கடமையாகும். ■



■ மருத்துவர் பா.சயந்தன்

# மழைக்கால பூஞ்சணத்தொற்று தனிச்சுகாதாரம் பேணுவோம்

மழைக்காலம், அதிக குளிரையும் குளிர்காற்றையும், பலத்த மழையையும் கொண்டுவருவது மட்டுமல்லாமல், பூஞ்சணத் தொற்றுகளையும் கொண்டுவரும் அபாயம் உள்ளது. ஈரமான சூழல் காரணமாக நாம் அணியும் பாதங்களில் ஈரம் அதிகமாகும் வாய்ப்புகள் உள்ளன.

அதேசமயம், குளிர்கால நிலை ஏற்படும் காலங்களில் தனிநபர் சுகாதாரத்தை அலட்சியப்படுத்துவதால் எமது தோலில் பூஞ்சணத்தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

### தொற்றினால் அதிகம் பாதிப்படைவோர்:

பாடசாலைச் சிறார்களும் மாணவர்களும்: மழைக்காலங்களில் பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்களின் பாதங்களும் காலணிகளும் அதிக அளவில் ஈரமடையும். இதனால் தொற்றுகள் ஏற்படும்.

விளையாட்டு வீரர்கள்: வியர்வையால் ஈரமடைந்த காலணிகள், காலுறைகள் என்பவற்றாலும், மேலும் வீரர்கள் பயன்படுத்தும் பாதுகாப்புப் பெட்டக அறையைப் பகிர்ந்துகொள்வதாலும் பூச்சித் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

நீரிழிவு நோயாளிகள்: நீரிழிவு நோயாளிகளின் தோல், தொற்றுகளுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம்.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்: குறைந்த அளவு பூச்சித் தொற்றுகள் கூட இவர்களில் வேகமாகப் பரவும் வாய்ப்பு உள்ளது.

ஈரமான ஆடைகளைத் தொடர்ந்து அணிபவர்கள்: ஈரமான, இறுக்கமான ஆடைகளில் பூச்சைகள் மிகவும் செழிப்பாக வளரும்.

### பொதுவான தொற்றுகள்:

குடற்புழு (Ringworm): வட்ட வடிவ அரிப்புத் திட்டுகளை உருவாக்கும்.

சேற்றுப்புண் (Athlete's Foot): விரல்களுக்கு இடையே அரிப்பு, சொறி, வெடிப்பு, தோல் உரிதல் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

காண்டிடா (Candida) என்ற பூச்சித் தொற்று: ஈரமான உடல் மேற்பரப்புகளில் குறிப்பாக அக்குளில், வயிற்றுக்கும் தொடைக்கும் இடையே, பாதங்களில் ஈரப்பசை, வெள்ளைத் திட்டுகளாகக் காணப்படும்.

நகப் பூச்சித் தொற்று: தடித்த, மஞ்சள் நிறமான அல்லது உடையக்கூடிய நகங்களை உருவாக்கும்.

### எச்சரிக்கைக் குறிகள்:

எரிச்சல் மற்றும் அரிப்பு தொடர்ந்து இருப்பது.

பரவும் வெள்ளை அல்லது சிவப்புத் திட்டுகள் தோன்றுதல்.

விரல்களுக்கிடையே தோல் உரிதல் மற்றும் துர்நாற்றம் வருதல்.

தடித்து, நிறம் மாறிய நகங்கள்.

### எவ்வாறு தவிர்ப்பது?

குளித்த பின்னர் அல்லது ஈரத்துக்கு உட்பட்ட பின்னர், உடலையும் பாதங்களையும் நன்றாகத் துடைத்து உலர வைக்க வேண்டும். எப்போதும் தூய்மையான, பருத்தித் துணிகளால் ஆன ஆடைகளையும் காலுறைகளையும் அணிய வேண்டும்.

நீண்ட நேரம் ஈரமான ஆடைகள் அல்லது காலுறைகளை அணிந்து இருப்பதைத் தவிர்க்க வேண்டும். காலணிகள், காலுறைகள் மற்றும் துண்டுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். உடைமாற்றும் அறைகள், பொது குளியலறைகள் போன்ற இடங்களில் துண்டுடன் நடக்கவும், காலணிகள் அணியவும் வேண்டும்.

### மருத்துவரை எப்போது சந்திக்க வேண்டும்?

சொறி அல்லது அரிப்பு மிக வேகமாகப் பரவும் போது

வெடிப்புகள் அல்லது புண்கள் அதிக வலியை ஏற்படுத்தும் போது

தோலிலோ நகங்களிலோ அசாதாரணமான மாற்றங்கள் தெரியும் போது

### முடிவுரை:

மழைக்காலங்களில் பூஞ்சணத் தொற்றுக்கள் யாரையும் தாக்கலாம். ஆனால் மாணவர்களும் சிறார்களும் அதிக கவனம் எடுக்கவேண்டும். தூய்மையாகவும் உலர்வாகவும் இருப்பதே சிறந்த பாதுகாப்பு முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்

## புளியம்பொக்கணை நாகேஸ்வர வித்தியாலயத்தில் போராட்டம்



**கிளிநொச்சி, நவ.5**
**பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வலியுறுத்தி கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

பெற்றோர், பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலையின் நுழைவாயிலை மறித்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த இடத்துக்கு கிளிநொச்சி வடக்கு வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வருகைதந்து பெற்றோருடன் கலந்துரையாடி விடுமுறை நிறைவடைந்ததும் ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது. (ச-இ)

# மயானங்களில் பலஸ்தீனர்கள்

இஸ்ரேலின் கோரத் தாக்குதல்கள் காரணமாக, காஸாவில் உள்ள மயானங்களில் பலஸ்தீனர்கள் தஞ்சமடைந்துள்ளனர் என்று பலஸ்தீன போர்க் கண்காணிப்பகம் கூறியுள்ளது. (ம)

# 'GovPay' மைல்கல்

கொழும்பு, நவ.5
நாட்டில் அரச சேவைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'GovPay' என்ற டிஜிற்றல் கட்டணமுறை மூலம் ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிக பணம் செலுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் வரையான நிலைவரப்படி இந்த மைல்கல்லை எட்டியுள்ளது.
அதேநேரம் 200 அரச நிறுவனங்கள் இந்த டிஜிற்றல் கட்டணமுறையில் இணைந்துள்ளன என்று டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
வரிகள் மற்றும் அபராதங்கள் உட்பட பல்வேறு அரசு தொடர்பான பரிவர்த்தனைகளை விரைவாகவும், எளிதாகவும், பணமில்லாமலும் செய்யும் நோக்கில் இந்தப் புதிய கட்டணமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)




நீர்வேலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பழைய அம்மன் கோவிலில் நவக்கிரக பிரதிஷ்டை மகாகும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. (ச-25, 17)

# மருந்து விசிறப்பட்ட பழங்கள் விற்பனை

## மக்கள் விசனம்

யாழ். குடாநாட்டில் மருந்தடிக்கப்பட்டு புழுக்க வைத்த மாம்பழம் மற்றும் வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
மாம்பழங்கள் காய் மற்றும் பிஞ்சுப் பருவங்களிலேயே பறிக்கப்பட்டு மருந்து மூலம் பழுக்கவைக்கப்பட்டு சந்தைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.
இந்த மாம்பழங்களை உட்கொள்வதன் மூலம் உடலுக்குத் தீங்கு ஏற்படுவதோடு உயிர் ஆபத்துகளும் ஏற்படக்கூடும். எனவே சுகாதார விதிமுறைகளை மீறி மக்களுக்கு கேடுவிளைவிக்கும் வகையிலான இத்தகைய செயற்பாட்டை கண்காணித்து சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 17)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | உதிர்வு |
|---|---|---|
| 09 . 01 . 1964 |  | 03 . 11 . 2025 |


### கந்தசாமி சிறீஸ்கந்தநாதன்

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் மணற்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிறீஸ்காந்தநாதன் (உடையார் சிறி) கடந்த 03.11.2025 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - சிவயோகம் தம்பதியரின் மருமகனும், வேதநாயகி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும், சசிகலா (லண்டன் UK), யசிகலா (லண்டன் UK), மயூரன் (கிராம அலுவலர் GS) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசூரியன், துஷாந்தன், வதனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துஜிந்தன், பவினாஷ், திவ்யன், சேந்தன், கவின், நிவேதனா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தெய்வநாயகி மற்றும் தேவசாயினி, அன்னபூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உமாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், உருத்திரமூர்த்தி, சோதிநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் தீவங்காடு இந்து மயானத்தில் நடைபெறும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 99[illegible] (மகன்)

"ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ"

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 29 . 01 . 1957 |  | 15 . 11 . 2024 |

### அமரர் சுடலைமுத்து வசந்தகோகிலன்
(ஆச்சாரி - வசந்தன் மாமா)

அன்பின் தந்தையே,
உன்னுடன் இருந்த ஒவ்வொரு நொடியும்
நெஞ்சில் பதிந்த நினைவாகி விட்டது.
உயிர் மறைந்தாலும், நினைவுகள்
நிலைத்திருக்கின்றன...

நேரம் மாறினாலும் நினைவு மாறவில்லை,
நிழல் போல் எங்களுடன் நீயே நடக்கிறாய்.
உன் சிரிப்பு, உன் பாசம், உன் அறிவுரை
இன்றும் எங்கள் வாழ்வின் வழிகாட்டி.

நினைத்தால் கண்கள் நனைந்து விடும்,
நிமிடமொரு சும்மா இல்லை மனம்.
சிரித்த முகம் மறைந்தாலும்,
சிந்தையில் நீயே வாழ்கிறாய் அப்பா.

உன் குரல் இன்னும் காதில் ஒலிக்குது,
உன் வார்த்தை இன்னும் வழிகாட்டுது.
வாழ்க்கை என்ற பாதையில்,
உன் அன்பு தான் எனது நிழல்.

நீ இல்லாமையால் வீடு வெறுமை,
ஆனா நினைவுகள் நிறைந்த ஒளிமை.
என்றும் எங்களுள் நீ வாழ்கிறாய்,
அப்பா – எங்கள் இதயத்தில் நிலையாக.

குடும்பத்தினர்
077 69 92 136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாணவனின் மாதிரிகள் கொழும்புக்கு

வவுனியா பல்கலைக்கழகத்தில் உயிரிழந்த மாணவனின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மாணவனின் இறப்புக்கான காரணம் முழுமையாகக் கண்டறியப்படாத நிலையில், அவரது குருதி மற்றும் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசேதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பப் பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயின்ற குறித்த மாணவன் அண்மையில் உயிரிழந்த நிலையில், மாணவனுக்குப் பகிடிவதையின் போது வலுக்கட்டாயமாக மதுபானம் பருக்கப்பட்டதாலேயே அவர் உயிரிழந்தார் என்று மாணவனின் உறவினர்களால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-இ)

## நாகபூஷணி திருமண சேவை

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)

077 138 7596, 071 9999 306

(CR 45815) A


## GTV சிறந்த சேவை ஊடாக

- Poland Malta Visit Visa 21 நாட்களில் விசா
- 90 தொடக்கம் 180 நாள் விசாக்கள்
- 29 நாடுகளுக்கு Schengen Visit Visa மூலம் பயணிக்க முடியும்.
- அனைத்து Sponsor எம்மால் செய்யப்படும்.
- மொத்த கட்டணம் 36 இலட்சம் மட்டும்.
- Advance 3.6 இலட்சம்.
- ஒப்பந்தம் மூலம் 100% விசா

GTV Consultants Private Limited
Katcheri Nallur Road, Jaffna
Contact Number - 075 442 5718

(CS/59822) J-1

## மரண அறிவித்தல்



### கதிரமலை விக்கினேஸ்வரன் (விக்கி)

(முன்னாள் சுன்னாகம் வர்த்தக சங்க எழுதுவினைஞர் (Clerk))

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரமலை விக்கினேஸ்வரன் (விக்கி) அவர்கள் நேற்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிரமலை லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வனும், துரைசிங்கம் சுதர்சனின் (பொறியியலாளர் டோக்கியோ சீமெந்து கம்பனி) பாசமிகு மைத்துனரும், சுதர்சன் சுஜீவாவின் அன்புச் சகோதரரும், சுதர்சன் குற்றாளன் (பொறியியல் பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்), சுதர்சன் தனந்திகா (தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2025) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


து.சுதர்சன் - 077 347 9462
(மைத்துனர்)
சு.சுஜீவா - 077 169 8972
(சகோதரி)

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 4325) A

## மரண அறிவித்தல்

மலர்வு 20.01.1933



உதிர்வு 03.11.2025

### திருமதி. குமாரசுவாமி இரத்தினம்

யாழ்ப்பாணம் புத்தூர், வாதரவத்தையை பிறப்பிடமாகவும், வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. குமாரசுவாமி இரத்தினம் அவர்கள் 03.11.2025 திங்கட்கிழமை அன்று ஓமந்தையில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், ஆறுமுகம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசுவாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்லம்மா, ஆச்சிமுத்து, தங்கச்சிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசதாசன், நகுலேஸ்வரி, ஆறுமுகதாசன், பசுபதிதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிர்மலாதேவி, கணேசநாதன், தபோதினி, விரதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜாபிரணவி, டிலக்ஷன், சஜித், தக்ஷகி, தஜனி, அபிஷன், துவிஜன், விஷாகன், ஹரிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷக்திதரனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஓமந்தையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்பு தகனத்திற்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரச வீட்டுத்திட்டம்
வேப்பங்குளம்,
ஓமந்தை.

தகவல் :
குடும்பத்தினர்
077 3740 450

(CS 4321) A

## மரண அறிவித்தல்

மலர்வு 27.01.1952



உதிர்வு 03.11.2025

### திருமதி ஜெயராணி சின்னையா

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜெயராணி சின்னையா கடந்த 03.11.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா (இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்) - நாகரட்ணாம்பாள் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், நிலானி (கொழும்பு), நிசாந்தன் (CEO - MR Seal), நிசாந்தினி (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிஷான் (Sierra Steel Colombo), அபர்ணா (Managing Director- MR Seal), அருள்குமரன் (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெகநாதன் (லண்டன்), குகதாசன் (அவுஸ்திரேலியா), ஜெயகுமாரன் (பிரான்ஸ்), ஜெயசோதி ஆகியோரின் அன்பு சகோதரியும், செல்வநாயகி (லண்டன்), கீத்தா (அவுஸ்திரேலியா), சந்திரகுமாரி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), Dr.தணிகாசலம் (அவுஸ்திரேலியா), குணமணி (கொழும்பு), காலஞ்சென்ற Dr.இரத்தினகோபால், சுந்தரலிங்கம் (துன்னாலை), கணேசலிங்கம் (ஜேர்மனி), சரோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தரஞ்சன், கெஷ்வின், நிர்துலா, சுவராகினி, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2025) வியாழக்கிழமை காலை 09:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகன கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
0776779274 (மகன்)

(CS 4322) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் - மோ.சைக்கிள் விபத்து இளம் குடும்பத்தலைவர் சாவு!

## தெல்லிப்பழையில் துயரம்

யாழ்ப்பாணம், நவ. 5



யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைச் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற டிப்பர் - மோட்டார்சைக்கிள் விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மயிலிட்டியைச் சேர்ந்த வசந்த் (வயது-35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞர் மற்றொரு மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளாகி வீதியில் வீழ்ந்துள்ளார். அப்போது, பின்னால்வந்த கனரக வாகனமொன்று குறித்த இளைஞரின் தலைமீது ஏறியதில் அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26-66)

### புதிய...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் மீள்புதுப்பிக்கப்படும் வளங்களின் விரிவாக்கத் திட்டத்துக்கு அமைய அதிகளவான காற்று ஆற்றல்வளம் கொண்ட பிரதேசமாக அடையாளங் காணப்பட்டுள்ள மன்னார் தீவில் மூன்று காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன.

குறித்த கருத்திட்டங்களில் ஒரு கருத்திட்டமான 'தம்பபவனி' காற்றாலை மின்னுற்பத்தி நிலைய நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய கருத்திட்டங்களான 'வின்ட்ஸ்கேப் மன்னார்' 20 மெகாவாற்ஸ் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் 'ஹேலிஸ் பென்டன்ஸ்' 50 மெகாவாற்ஸ் காற்றாலை மின்னுற்பத்தி நடவடிக்கைகள் முறையே 2025ஆம் ஆண்டு மற்றும் 2026ஆம் டிசெம்பர் மாதங்களில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தன. இந்த நிலையில், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள காற்றாலைத் திட்டங்களைத் தவிர மேலதிக திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

### வவுனியா...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இ.சிந்துஜா (வயது-25) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

உயிரிழந்த பெண்ணின் தாயார், குறித்த பெண் வசித்துவரும் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்றபோது, தனது மகள் சடலமாக இருப்பதை அவதானித்துள்ளார். இது தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸாரிடம் தகவல் வழங்கப்பட்ட நிலையில், சடலத்தை மீட்ட பொலிஸார் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதால், இந்த இறப்புச் சம்பவித்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த பெண்ணின் கணவனையும், குழந்தையையும் காணவில்லை என்றும், அவர் குழந்தையுடன் தலைமறைவாகியிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110)

### தமிழரசின்...

அநுர அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பில் எத்தகைய முடிவை எடுப்பது, மாகாணசபைத் தேர்தல் மற்றும் அரசியல்தீர்வு தொடர்பில் இதன்போது கலந்தாலோசிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (அ-ம-66)

### திஸ்ஸ...

போராட்டத்தை முன்னெடுத்தனர். திஸ்ஸ விகாரையில் ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே, நேற்றும் போராட்டம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் இன்றைய தினமும் போராட்டம் தொடரவுள்ளது. (அ-ம-26-20-66)

### குளவி...

என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

காரைநகர் மணல்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கடந்த முதலாம் திகதியன்று மாடு அவிழ்க்கச் சென்றுள்ளார். இதன்போது, அவரைக் கருங்குளவிகள் கூட்டாகத் தாக்கியுள்ளன. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### 950 கிலோ...

எஸ்.லெனின்குமார் மற்றும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஹுசைன் ஆகியோரின் முன்னிலையில், கோம்பயன் மணல் இந்து மயானத்தின் மின்தகன மேடையில் போடப்பட்டு அந்தப் போதைப் பொருள்கள் எரித்து அழிக்கப்பட்டன. நீதிமன்ற பதிவாளர், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோரும் இந்தச் சம்பவத்தின்போது முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### சங்குப்பிட்டியில்...

12ஆம் திகதி சங்குப்பிட்டி கடற்பரப்பில் காரைநகரைச் சேர்ந்த பெண்ணொருவர் முகம் தீக்கிரையாக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, தலையில் பலமாகத் தாக்கப்பட்டதாலும், நுரையீரலுக்குள் தண்ணீர் உட்புகுந்ததாலும் இறப்புச் சம்பவித்ததாகத் தெரியவந்தது.

உயிரிழந்த பெண்ணின் நண்பியொருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், அந்தப் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகள் மற்றும் உயிரிழந்த பெண்ணின் தொலைபேசி அழைப்புகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து மேலதிக நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர். இதன்போதே, குறித்த தவில் வித்துவான் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்ததாவது:-

பெண்ணுக்கும் குறித்த தவில் வித்துவானுக்கும் இடையில் நீண்டநாள் தொடர்பு இருந்துவந்துள்ளது. சம்பவம் இடம்பெற்ற அன்று இருவரும் மது அருந்தியுள்ளனர். பின்னர், காரொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொண்டு சங்குப்பிட்டிப் பகுதியூடாக சென்றுள்ளனர். இதன்போது குறித்த பெண் அதீத மதுபோதையால் வாந்தி எடுப்பதற்காக இறங்கிய வேளை போதையின் தடுமாற்றத்தால் கடலினுள் விழுந்துள்ளார். அதனை வீதியால் சென்ற டிப்பர் சாரதி அவதானித்துள்ளார். இதையடுத்து, காரில் இருந்த குறித்த சந்தேகநபர் இறங்கிச் சென்று அவதானித்தபோது, குறித்த பெண் சுயநினைவின்றி இருந்ததால், அடையாளத்தை அழிப்பதற்காக முகத்தில் எரிபொருளை ஊற்றி எரித்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு உருத்திரபுரம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று தங்கியிருந்துள்ளார். இதையடுத்து, மீண்டும் குப்பிளானுக்கு வந்த நிலையிலேயே, அவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் - என்றனர்.

அவரிடம் இருந்து 11 பவுண் நகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய நகைகள் தனியார் நிதி நிறுவனமொன்றில் 17 இலட்சம் ரூபாவுக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தி, பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸார் நீதிமன்ற அனுமதி பெற்றுள்ளனர். (அ-ம-26-28-113)

### வன்முறைக்குழு...

பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இந்த அடாவடித்தனம் இடம்பெற்றுள்ளது. வீடொன்றுக்குள் நுழைந்த மர்மநபர்கள், வீட்டின் உடைமைகளை அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். இதன்போது, வீட்டுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீட்டின் உடைமைகள் சிலவற்றுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. வன்முறைக் குழு தப்பிச் சென்றதைத் தொடர்ந்து வீட்டார் தீயைக் கட்டுப்படுத்தியதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

### பட்ஜெட்டில்...

ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2026ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இம்முறை பட்ஜெட்டில் வரி விதிப்புகள் இருக்காது என்று ஜனாதிபதி அறிவித்துவிட்டார். அத்துடன், அரசாங்கத்தால் முடியுமான அளவுக்கு மக்களுக்குச் சலுகை வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். அது எவ்வாறு இடம்பெறும் என்பது தொடர்பில் ஜனாதிபதி தமது உரையில் தெளிவுபடுத்துவார். உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

- தென்மராட்சி - 50,000
- யாழ்மாவட்டம் - 55,000
- வடமராட்சி - 55,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்பு: 076 324 9977

## தென்னிந்திய யாத்திரை

ஆரம்பத் திகதி : 07.12.2025

தமிழ்நாடு,ஆந்திரா,பாண்டிச்சேரி ஊடான யாத்திரை
யாத்திரிகர்:10 நாட்கள்:12

Amount 250,000

தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார்,மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர்,திருப்பதி,ஸ்ரீரெங்கம்,சமயபுரம்,பிரம்மாகோயில், இராமேஸ்வரம்,பழனி,திருத்தணி.திருப்பரம்குன்றம், திருச்செந்தூர்,சிதம்பரம்,ஏகாம்பரேஸ்வரர்,காலகஸ்தி, திருவெண்ணாமலை,சுவாமிமலை,பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல்,மேல்மருவத்தூர்,தஞ்சாவூர், நவபாஷாணம்,சூரியன்,சந்திரன்,சுக்கிரன்,புதன்,வியாழபகவான், செவ்வாய்,ராகு,கேது,சனி பகலான்,திருநள்ளாறு,நளன்குளத்தின் நீராடல்,தோணியப்பர்,மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர்,வடபழனி முருகன், உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன்மெரீனாபீச்,பாண்டிச்சேரி பீச்,MGR ஜெயலலிதா,அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும், பார்க்கலாம்.

**சென்னையின் ஒரு நாள் Shopping**

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு,குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள்,AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும எமது சேவை.

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்:ராஜன்
59,3/6,செட்டியார் தெரு,கொழும்பு - 11.
srianganathan1944@gmail.com,sriranganathan2601@gmail.com
Tel: 077 7362154


# செல்வச்சந்நிதி கோவிலில் திருக்கல்யாண உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.5

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் திருக்கல்யாண உற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு இடம் பெறும். முருகப்பெருமானுக்கும் வள்ளியம்மைக்கும் திருக்கல்யாணம் இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதலைத் தொடர்ந்து கந்தபுராணப் பூர்த்தி நிகழ்வு இடம் பெறும். (ச-25, 17)


## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு வேலை ஆட்கள் தேவை.

தொடர்பு: 077 556 6605

## வேலையாட்கள் தேவை

மருதனார் மடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் சுடரோன் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
077 134 5625

(CS/59623) J-1


# புலம்பெயரிகளுக்கு அரசு புத்தாண்டுப் பரிசு

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, நவ. 5

புலம்பெயர் தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களை திருப்திபடுத்துவதற்காக புத்தாண்டுக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு கனேடிய தமிழ்க் காங்கிரஸ், உலக தமிழர் பேரவை உள்ளிட்ட தமிழ் பிரிவினைவாதக் குழுக்கள் ஆதரவு வழங்கின. மாகாணசபைத் தேர்தலை நடத்தி, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட் டத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்பதே இத்தரப்புகளின் கோரிக்கையாக இருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மாகாணசபைத் தேர்தலை இந்த அரசாங்கம் நிச்சயம் நடத்தும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-25, 44)





2024ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் (A/L) பின்னர்,

**ESOFT METRO CAMPUS - JAFFNA**

யாழ் கிளையில் **UK Level 3** டிப்ளோமா கற்கை நெறிகளை

வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, வருடாந்த விருது வழங்கும் விழாவில் கலந்துகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

450+ மாணவர்கள் | Diploma Awards | 05. கார்த்திகை மாதம் | திருவள்ளுவர் கலாசார மண்டபம்

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS - JAFFNA**

No.137, K.K.S Road, Jaffna | 021 7 572 572 | 076 8700 400

Shaping Lives, Creating Futures.


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org